**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No**. 09/2024

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கந்தசாமி | கணவர் பெயர் | : ----- |
| தகப்பனார் பெயர் | குட்டிபூசாரி | வயது | : 60 |
| கிராமம் | சூரப்பள்ளி | நாள் | : 06.11.2025 |
| தாலுகா | மேட்டுர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 1ம் அயிட்ட சொத்தை பொறுத்து வயரக்கவுண்டர் என்பவர் எனக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து என் தந்தை 1ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளின் பெயருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 27.12.2017 ம் தேதியிட்ட என் பெயரிலான வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. 21.06.2021 ம் தேதியிட்ட என் மகன் சம்பத்குமார் பெயரிலான வீட்டு மின் கட்டண ரசீது அசல் வா.**சா.ஆ.5** ஆகும்.

6. 25.08.2021ம் தேதியிட்ட என் பெயரிலான மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. 2ம் வாதி 04.01.2021ம் ஜலகண்டாபுரம் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8. 2ம் வாதி 04.01.2021ம் ஜலகண்டாபுரம் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

9. 2ம் வாதி 01.12.2020ம் ஜலகண்டாபுரம் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பிய அறிவிப்பு கை நகல் **வா.சா.ஆ.9** ஆகும்.

10. 2ம் வாதிக்கு ஜலகண்டாபுரம் சார்பதிவாளர் அவர்கள் அனுப்பிய அறிவிப்பு சார்வு நகல் **வா.சா.ஆ.10** ஆகும்.

11. என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆகும்.

12. என் மனைவி வெள்ளையம்மாள் கொடுத்த புகாரின் பேரில் வழங்கப்பட்ட மனு ரசீது எண்.17/2020 அசல் **வா.சா.ஆ.12** ஆகும்.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு 02.12.2025ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.